# The State of Pottery as Revealed by Excavations

**Dr. S. Angel Jayaletrani**
*Assistant Professor, Head of Department, Department of Tamil*
*St. Alphonsa Arts and Science College*
*Soosaipuram, Karunkal, Kanyakumari District*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255894

**Abstract**
*Although people discard broken pottery shards, it can be said that these very fragments serve today as a mirror of time that reveals culture through excavations. This is because pottery is what reflects the culture of a place. Pottery was the very first creation to emerge in the world. This is because humans, upon acquiring some knowledge, learned the art of taking other materials nearby and fashioning them into useful objects for their needs. This is what first comes to mind when we think about it. The first industry/workshop that emerged was also the pottery-making workshop. It was through the pottery-making industry that humans first produced goods and began the system of trade and barter commerce. Therefore, the objective of this article is to examine information about pottery through excavations.*
***Keywords****: Excavation, Pottery, Potters, Raw materials, Utilitarian objects*

**References**

1. The myth of Sisyphus, penquin books ltd
2. Fear and trempling, penquin books ltd
3. Jean-Paul Sartre (Being and Nothingness -1943), (rouldge classics edition)
4. Friedrich Nietzsche (Twilight of the Idols- 1889) penguin classics

# அகழாய்வுகள் உணர்த்தும் மட்கலன் நிலை

***முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட்ராணி***
உதவிப் பேராசிரியர், துறைத்தலைவர், தமிழ்த்துறை
புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சூசைபுரம், கருங்கல், கன்னியாகுமரி மாவட்டம்

***ஆய்வுச் சுருக்கம்***
*மக்கள் உடைந்த மட்கலன் ஓடுகளை ஒதுக்கித் தள்ளினாலும் அவைகளே அகழாய்வுகளில் இன்று பண்பாட்டை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றது எனலாம். ஏனெனில்,மட்கலன்களே ஓரிடத்தில் பண்பாட்டை பிரதிபலிக்கக் கூடியவை ஆகும். உலகிலேயே முதன் முதலில் தோன்றிய படைப்பு மட்கலன் தான். மனிதன் சிறிது அறிவைப் பெற்றவுடன் தனக்கருகே உள்ள பிறபொருட்களை எடுத்து அதனைக் கொண்டு தனக்குத் தேவையானப் பொருளாக வடிவமைத்து பயன்படுத்தும்கலையைக் கற்றதனால் தான். இதனை முதன்முதலில் வைத்து எண்ணத் தோன்றுகிறது. முதன்முதலில் தோன்றிய தொழிற்கூடமும் மட்கலன்தயாரிக்கும் தொழிற்கூடம்தான். மனிதன் ஒரு பொருளை உற்பத்தி செய்து வணிகம் எனும் பண்டமாற்று முறையை ஆரம்பித்ததும் இம்மட்கலன் தயாரித்தல் தொழிலால்தான். எனவே அகழாய்வுகள் வாயிலாக மட்கலன் குறித்த செய்திகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***திறவுச்சொற்கள்:*** *அகழாய்வு, மட்கலன், வேட்கோவர், மூலப்பொருள், பயன்பாட்டுப் பொருள்*

## ஆய்வு அறிமுகம்

மட்கலன்களை முதன் முதலில் தயாரித்த மக்களே வேட்கோவர்கள் எனப்படுகின்றனர். எனவே இவர்களே முதன் முதலில் தொழிற்பேட்டையை உழைத்து உருவாக்கியவர்கள் ஆவர். மூலப்பொருள் ஒன்றை கண்டறிந்து அதன் வாயிலாக ஓர் பயன்பாட்டு பொருளைத் தயாரித்தல் என்பதில் மட்கலன் தயாரித்தல் தொழிலே முதன்மையானது எனலாம். அத்தகைய மக்கள் அழியாத் தன்மை பெற்றதனாலேயே இன்றளவும் மட்கலன் பயன்பாடு தொடர்ந்து பழக்கத்தில் இருந்து வருகின்றது என்பதும், இம்மட்கலன்களே அகழாய்வாளர்கள் தங்களது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் முதன்மைச் சான்றாகத் திகழ்கின்றது. இம்மட்கலன்கள் இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைநிலை, பொருளாதாரம், அவர்கள் பெற்ற கல்வி அறிவு போன்ற தகவல்களை நமக்கு வழங்குகின்றன.

## மட்கலன்களால் அறியலாகும் செய்திகள்

மட்கலன்களைக் கொண்டு யார் யார் இங்கு வந்து சென்றுள்ளனர் என்பதும், இவை எங்கிருந்து வந்தன என்பதையும், நம் நாட்டைச் சேர்ந்தவைகளா, இல்லை அயல் நாட்டைச் சேர்ந்தவைகளா, வட இந்தியாவில் இருந்து வந்தவைகளா, அல்லது தமிழகத்திற்கே உரியதா என அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் வழங்கக்கூடியது தொல்பொருள் மட்கலன்கள் மட்டுமே என்பது அகழாய்வாளர்களின் கருத்தாகும்.

மட்கலன்கள் தான் முதல் கல்விச் சாலையாக திகழ்ந்துள்ளது என்றால் ஆச்சரியம் தான். ஆனால் அதுவே உண்மை. ஏனெனில் முதன் முதலில் மனிதன் தனது சங்கேத மொழிக்கு விடை கொடுத்தபின் தான் நினைத்தவற்றை பதிவு செய்து அடுத்தவர்களுக்கு தெரிவிக்க பயன்படுத்தியது பாறைகளை அடுத்து மட்கலன்களையே ஆகும். இயற்கையான பாறைகளின் மீது வரையப்பட்ட ஓவியங்களும் குறியீடுகளும் ஒரு

இடத்திற்குரியவைகளாகவே திகழ்ந்தன. இதனால் தான் சொல்ல நினைக்கும் கருத்துக்களையோ எழுத நினைப்பவற்றையோ தானும் தனது மக்களும் வசிக்கும் இயற்கையான பாறை குகைகளில் தான் முதலில் வரைய முற்பட்டான் எழுத்தின் ஆரம்ப காலகட்டம் இதுவே ஆகும். இதை எடுத்து தொலைதூரத்தில் உள்ளவர்களும் தங்களிடம் வந்து மட்கலன்களை பெறுபவர்களும் பெருகப் பெருக பாறைகளை அடுத்து மட்கலன்களை பதிவு செய்யும் களமாக பயன்படுத்தத் துவங்குகின்றான். அவ்வாறு அவனது துவக்கம் தான் மட்கலன்களில் காணப்படும் கீறல் குறியீடுகளை பாறைகளில் வரைந்தவன் பின்னர் மட்கலன்களில் தனது கைவண்ணத்தை பதிவிடுகின்றனர். இவையனைத்தும் முதலில் கோடுகளாக அமைகின்றன. குறியீடுகள் வளர்ச்சி பெற்று சித்திரக் குறியீடுகளாக மாறினர்.அதாவது வில், அம்பு, ஏணி, மலை, சூரியன், சந்திரன் என்று தனது எண்ண ஓட்டங்கள் அனைத்தையும் மட்கலன்களில் பதிவு செய்தான். பாறைகளில் காணப்பட்ட ஓவியங்களில் காணப்படும் குறியீடுகளிலா பெரும்பாலானவைகள் மட்கலன்களில் கிடைத்துள்ளது. இதற்குச் சான்று ஆகும். எனவேதான் மட்கலன்கள் கல்விச் சாலையின் முதல் அச்சாரமாக அமைந்துள்ளது. தற்பொழுது கல்விச்சாலையில் கரும்பலகைகள் அமைந்துள்ளது போன்றதாகும். இதையடுத்து எழுத்துக்களும் அதே இடத்தில் இடம்பெறும் அளவிற்கு பெருகின என்றால் கல்வியை முதன்முதலில் ஓலையில் எழுதுவதற்கு முன்னரே பானைகளில் தான் எழுதியதாகக் கருத வேண்டி உள்ளது. ஓலைகளில் நமக்கு கிடைத்தவைகள் எழுத்துக்கள் கொண்ட நிலையில்தான்.ஆனால் மட்கலன்களில் தான் கீறல் குறியீட்டில் இருந்து தொடர்ந்து முழு வளர்ச்சி பெற்ற நிலை வரையிலும் கிடைத்துள்ளது என்பதை அறிதல் வேண்டும் எனவே தான் மட்கலன்கள் கல்விச் சாலையின் முதன்மை கருவியாக அமைகிறது எனக் கருத இடமளிக்கின்றது.

மட்கலன்கள் நாட்டில் கூடித் தொழில் புரியும் பழக்கத்தையும், அதன் வாயிலாகப் பண்டமாற்று வாணிகத்தையும், பின்னர் மட்கலன்களே ஓர் தனி தொழிற்சாலையாகவும் உருவெடுத்தன. மாற்றமும் வளர்ச்சியும் பெற்ற மக்கள் ஒரு இன்றியமையாத இடத்தையும் அத்தியாவசியத் தேவையாகவும் மாற்றம் பெற்றது. பின்னர் தான் அவை பல இடங்களுக்கும் செல்லும் ஆளுகையைப் பெற்றுத் திகழ்ந்தது. இதன் விளைவாக அக்கால மக்கள் தனக்குத் தெரிந்த அடையாளங்களை குறியீடுகளாக அம்மட்கலன்களின் மேல்கீறத் தொடங்குகின்றான். சித்திரங்களாகவும் அடுத்து எழுத்துக்களாகவும் வளர்ச்சி பெற்று மட்கலன்களுக்கு என ஓர் தனி இடத்தை வழங்க முற்பட்டனர். அத்தகைய மட்கலன்கள் தான் பண்டைய காலம் முதல் பழக்கத்தில் இருந்தமையால் தற்போது அகழாய்வுகளில் காணப்படும் மட்கலன் ஓடுகளையும் கொண்டு காலக்கணிப்பையும், பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துக் கூறும் அளவிற்கு அவை உறுதுணையாக நிற்கின்றன என்கின்றனர் தொல்லியல் அகழ்வாய்வாளர்கள்.

### அகழாய்வில் மட்கலன் ஓடுகள் ஆற்றும் பங்கு

அகழாய்வில் ஒவ்வொரு மண்ணடுக்கிலும் ஏராளமான மட்கலன் கோடுகள் காணப்படுவது உண்டு. எனவே மட்கலன் ஓடுகள் பகுத்தாய்வு செய்வது அகழாய்வில் ஒரு முக்கியமானப் பணியாகும். இப்பணியினை மேற்கொள்ள மட்கலன் ஆய்வாளர்கள் மற்றும் இரண்டு மட்கலன் ஓடு உதவி ஆய்வாளர்கள் இவர்களுடன் அகழ்வு குழியில் பணிபுரியும் வேலை ஆட்கள் அதாவது மட்கலன் ஓடு ஆய்விற்கு எனத்தனியாகப் பிரித்து அலுவலர்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அத்தகைய

அலுவலர்களை வைத்துக்கொண்டு பானை ஓடுகளை ஆய்வு செய்தல் நன்று. அகழாய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அகழ்வு குழிக்கு அருகாமையில் அகழ்வுகுழிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மண்பாண்டக் கெட்டில் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். அகழாய்வில் சேகரிக்கும் ஓடுகள் அனைத்தும் வரிசையாக ஆழம் மாறாமல் தனித்தனியாக சுத்தம் செய்தல் வேண்டும். முதலில் அகழாய்வில் தோண்டி எடுக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளை நீரில் நன்கு ஊறவைத்தல் வேண்டும். அடுத்து ஊறிய மட்கலன் ஓடுகளை சிறிய அளவிலான துடைப்பான் கருவியைக் கொண்டு நன்கு தேய்த்து சுத்தம் செய்தல் வேண்டும். சுத்தம் செய்த ஓடுகளை நல்ல நீரால் மீண்டும் சுத்தம் செய்தல் வேண்டும். மண்பாண்ட ஓட்டில் எவ்வித மண் படிமங்களோ தூசுகளோ இருத்தல் கூடாது. இவ்வாறு நன்கு சுத்தம் செய்த ஓடுகளை வரிசையாக ஆய்வாளர் மேசைக்குக் கொண்டு வருதல் வேண்டும். இங்குதான் மண்பாண்ட ஓடுகளை தனித்தனியாக பகுத்து வெவ்வேறு வகை களையும், வேறுபாடுகளையும் கண்டறிந்து அதனை முறைப்படுத்தி பகுத்தல் பணியை மேற்கொள்ள வேண்டும்.

மட்கலத் துண்டுகளை தனித்தனியாகப் பகுத்து அவற்றை நன்கு ஆய்வு செய்த பின்பு அவற்றின் வடிவத்தை கண்டறியக்கூடிய வகையில் காணப்படும் மட்கலன்களை மட்டும் சேகரித்து பானை ஓடுகள் சேகரிக்கும் பைகளில் போடப்பட்டு அதனுடன் பானை ஓடு விவரக் குறிப்பு அட்டையையும் உள்ளே ஒன்றையும் வெளிப்பகுதியில் ஒன்றையும் வைத்து கட்டி பின்னர் ஆழத்தின் வரிசைப்படி பானை ஓட்டுப் பைகளுக்கு எண்ணிட்டு பானை ஓடு சேகரிக்கும் பைகளில் வெளியே கட்டி வைத்தல் வேண்டும். இவ்வாறு முறையாகக் கட்டி வைக்கப்பட்டால் தான் பின்னர் இப்பானை ஓடுகள் ஆய்வு அறிக்கை தயாரிக்க வசதியாக இருக்கும். மேலும் பானை ஒட்டின சிறிய துண்டுகளை சேகரித்தல் அவசியமற்றதாகும். ஒரு சில குறிப்பிட்ட தனித்தன்மை வாய்ந்த மட்கலன் ஓடுகளை உதாரணமாக ரோமானிய ஓடுகள் காணப்பட்டால் இவை பண்பாட்டின் வளர்ச்சியை புதிய வரவை விளக்க எடுத்துக் கூறும் அரிய சான்றாகும். இது போன்ற மட்கலன் ஓடுகளை தனியான முறையில் சேகரித்து குறிப்புகள் எழுதி தொல் பொருட்கள் சேகரிக்கும் உறையில் போடப்பட்டு பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். மேற்குறித்த முறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டால் தான் நமக்கு கிடைக்கக்கூடிய பண்டைய மட்கலன் ஓடுகளின் காலத்தையும் இடத்தையும் தெளிவாகக் கணித்து கூற முடியும்.

**ஆய்வு நிறைவுரை**

தொல்லியல் அகழாய்வை மேற்கொள்பவர்களுக்கும் நமது பண்டைய மக்கள் பயன்படுத்திய மட்கலன் பற்றிய செய்திகளை முழுமையாக அறிந்து கொள்ளவும் இவை மிகவும் பயனுள்ளதாக அமையும். ஒரு காலகட்டத்தில் இந்தியா முழுவதும் இம்மட்கலன்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன என்பதை இந்தியா முழுமையும் நடைபெற்ற அகழாய்வுகள் தெரிவிக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**

1. ச.செல்வராஜ், தொல்லியல் தமிழர் பண்பாட்டின் மட்கலன்கள், நாம் தமிழர் பதிப்பகம், 2019.
2. மா.சோ.விக்டர், குமரிக்கண்டம் ஆய்வு, தேடல் பதிப்பகம், 2020.
3. வெ. மணிகண்ட சேதுபதி, தொல்லியல் - அறிமுகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், 2023.
4. வி சிவசாமி, தொல்பொருளியல் ஓர் அறிமுகம், 1972.